பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை 14-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 16

# 460 தமிழ்க் கைதிகள் களுத்துறையில் உண்ணா விரதம்!

## மகஸீன் சிறைக்கு மாற்றக் கோரிக்கை

கொழும்பு, டிசம்பர் 14

களுத்துறைச் சிறைச்சாலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்று அங்குள்ள 460 தமிழ்க் கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

தம்மை அரசியல் கைதிகளாக தமது சொந்த இடங்களுக்கு அல்லது மகஸீன் சிறைக்கு மாற்றும்படியும்—மகஸீன் சிறையில் அரசியல் கைதிகளை மட்டுமே வைக்குமாறும்—அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கைதிகளை நேற்று ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் உறுப்பினர்கள் சென்று

(9 ஆம் பக்கம் பார்க்க)

## 50 சிங்களக் கைதிகள் நேற்று மாத்தறைக்கு இடம் மாற்றம்

### ஆனால் பாதாளஉலக கைதிகள் இன்னும் களுத்துறையில்

நேற்று முன்தினம் களுத்துறைச் சிறையில் தமிழ்க்கைதிகள் தாக்கப்பட்டு மூன்று கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து களுத்துறைச் சிறையில் இருந்து 50 சிங்களக் கைதிகள் நேற்று மாத்தறை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எனினும் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்குகாரணமாக இருந்தவர்கள் என்று கருதப்படும் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கைதிகள் பலர் இன்னும் களுத்துறைச் சிறையிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களை ஏற்பதற்கு ஏனைய சிறைகளில் தயக்கம் காட்டப்படுதாகக் கூறப்படுகிறது.

களுத்துறைச் சிறைச்சாலையில் மீண்டும் அசம்பாவித சம்பவங்கள் இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்காக தமிழ்- சிங்களக் கைதிகள் தனித்தனியாக வைக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாக நீதி அமைச்சின் செயலாளர் எம். எஸ். ஜயசிங்க தெரிவித்தார்.

(இ-21)

## தாக்கியவர்களிடம் கோடரி, கத்தி, பொல்லு

கொழும்பு, டிச. 14

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்டது ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்கள் கோடரி, கத்தி, பொல்லுகள் வைத்திருந்ததாகத் தமிழ்க் கைதிகள் தெரிவித்தனர் என்று நேற்று அங்கு சென்று திரும்பியஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஒரு சம்பவமே வெள்ளிக்கிழமை மோதலில் முடிவடைந்து மூன்று கைதிகளின் உயிருக்கு உலை வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உணவு பரிமாறும் போது ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது தமிழ்க்கைதி ஒருவரை சிங்களக் கைதி ஒருவர் அகப்பையால் தாக்கினார் என்று கூறப்படுகிறது.

வழமையாகக் கைதிகளுக்கு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கட்ட விசாரணை இன்று

யாழ்ப்பாணம், டிச. 14

குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழுவின் இறுதிக்கட்ட விசாரணை இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

இதுவரை நான்கு கட்ட விசாரணைகளை பலாலியில் மேற்கொண்டு 300க்கும் மேற்பட்டவர்களின் சாட்சியங்களை இக்குழு பதிவு செய்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவான மாநாட்டுக்கு இந்தியா தடை!

### டில்லியில் நேற்றும் இன்றும் நடைபெறஇருந்தது

புதுடில்லி, டிச. 14

ஈழத்தமிழரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்றும் இன்றும் நடைபெற இருந்த மாநாட்டுக்கு இறுதி நேரத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு ஆதரவான சர்வதேச அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

இந்திய முன்னாள் அமைச்சரும் சமதாக் கட்சித் தலைவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஜோசப்பரராஜசிங்கம், தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், தமிழர் ...

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரை காப்பாற்றுமாறு கெஞ்சிய கைதி!

### சிப்பாய் முன்னிலையில் வெட்டிக் கொலை

களுத்துறைச் சிறையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில், பாதுகாப்புத் தேடி தமது அறையை நோக்கி ஓடிய போது தடுக்கி விழுந்தவர்களே கொல்லப்பட்டனர்.

தடுக்கி விழுந்தவர்களில் ஒருவர் தம்மைக் காப்பாற்றுமாறு அங்கு நின்ற சிப்பாய் ஒருவரிடம் ஓடிச் சென்று கெஞ்சினார். அந்தச் சிப்பாயின் முன்னால் வைத்தே அந்தக் கைதி வெட்டிக் கொல்லப்பட்டார்.

களுத்துறை சிறைக்கு நேற்று விஜயம் செய்த புளொட் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அளித்த பேட்டி வருமாறு:-

களுத்துறைச் சிறையில் நேற்று நிலைமை ஓரளவு அமைதியாகக் காணப்பட்டது அது ஒரு தற்காலிக அமைதி போலவே தெரிகின்றது. ஏனெனில் அங்குள்ள தமிழ்க் கைதிகள் பெரும் பீதியுடன் காணப்படுகின்றனர்,

இங்கு நடந்த சம்பவம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸுக்கு தெரியாதாம்

களுத்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் வெள்ளி இரவு வரை நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்குத் தெரியாதாம்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வெள்ளி இரவு 7.00 மணி அளவில் அமைச்சர் பீரிஸுடன் தொடர்பு கொண்டு களுத்துறை சம்பவம் குறித்துக் கேட்டார்.

அப்படியா! அதனை விசாரித்துச் சொல்லுகிறேன் என்று அமைச்சர் பீரிஸ் பதில் அளித்தாராம். (இ)

## காயமடைந்த இருவர் யாழ். வாசிகள்

கொழும்பு, டிச. 14

களுத்துறைச்சிறையில் தாக்கப்பட்ட தமிழ்க் கைதிகளில் இருவர் மட்டுமே இன்னும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் சிறு காயங்களுடன் சிறையில் தங்கியுள்ளனர்.

தற்பொழுது ஆஸ்பத்திரியில் உள்ள இருவருக்கும் உயிராபத்து ஏற்படக் கூடிய பாரதூரமான காயம் இல்லை என்று புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் நேற்றுத் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் ஒருவர் கொடிகாமத்தை சேர்ந்த செல்லத்துரை கருணாகரன்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பெப்ரவரி 4க்குள் யுத்தம் முடிவுக்கு வருமா?

### சந்தேகம் என்கிறார் ஆய்வாளர்

கொழும்பு, டிச. 14

வன்னியில் தொடர்ந்து கடும் மழை பொழிந்து கொண்டிருக்கின்றது. பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இவ்வாறான நிலை பெரும்பாலும் ஜனவரி நடுப்பகுதி வரை தொடரும். எனவே எஞ்சியுள்ள ஓரிரு வாரங்களில் எவ்வாறு வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர முடியும்?

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தற்பொழுது விதித்துள்ள காலக்கெடு கேள்விக் குறியாகவே உள்ளது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி - ரெலோ தேர்தலில் போட்டி!

கொழும்பு, டிச. 14

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடப்போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் ரெலோவும் நேற்று அறிவித்தன.

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் நடைபெற உள்ள தேர்தல்களில் போட்டியிடுவதென தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முக்கிய தலைவர்களில் ஒருவருமான வி. ஆனந்த சங்கரி நேற்றுத் தெரிவித்தார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி வீதியில் 6 படையினர் பலி!

வவுனியா, டிச. 14

நெடுங்கேணி வீதியில் உழவு இயந்திரத்தில் சென்ற படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஆறு படையினர் கொல்லப்பட்டதாகவும் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டதாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

ஒலுமடுவுக்கும் கீரிசுட்டானுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-164-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணபிள்ளை அருள்வேல்நாதன் [நாதன்]

புலோலி தெற்கு கிருஸ்ணபிள்ளை அருள்வேல்நாதன் 12-12-1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - சிவபாக்கியத்தின் அன்பு மகனும், திரு. ஜெயராஜா (நீர்ப்பாசன இலாகா - வவுனியா), திருமதி ஈஸ்வரிதேவி-விஸ்வலிங்கம், திருமதி குணகுமாரி - விஜயரட்ணம் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வி. ஈஸ்வரிதேவி
(சகோதரி)

ஈஸ்வரி வாசா,
புலோலி தெற்கு, புலோலி.
(சி/2349)

## திருமதி பொன்னம்மா கந்தப்பு

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கந்தப்பு நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற நாகநாதர் கந்தப்பு அவர்களின் அன்பு மனைவியும், பரமானந்தன் (அஞ்சலகம், வேலணை), மதியாபரணம் (வர்த்தகர், கச்சேரியடி), திருமதி ப. கலாநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரிலோகவதி, இராசமலர், பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இன்று பிற்பகல் 1 மணியளவில் துண்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மதியாபரணம்

82/7, கண்டி வீதி,
(புகையிரதப் பாதை)
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
(51838)

## வைரமுத்து வல்லிபுரம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து வல்லிபுரம் 13-12-97 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் இலக்சுமியின் அன்புக் கணவரும், நடராசா, செல்வராசா (சுவிஸ்), ஜெயராசா, துரைராசா, ராசகுமார் (சுவிஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னமணி, நளினி (சுவிஸ்), செல்வநாயகி, பத்மாவதி, நிகிலா (சுவிஸ்), செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-97) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இருளன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
வ. நடராசா
(மகன்)

மடத்தடி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(51829)

## இராமலிங்கம் தர்மலிங்கம்

(இளைப்பாறிய அரசாங்க லிகிதர்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் யாமாளை சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தர்மலிங்கம் 12-12-97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் சிவபாக்கியலக்சுமியின் அன்புக் கணவரும். சுரேஷ்குமார் (கனடா), ஷகிலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். ஜெயந்தியின் மாமனாரும், ஆசப்பிள்ளை பொன்னம்மாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆசப்பிள்ளை பொன்னம்மா
(மாமி)

சுழிபுரம்.
(51828)

## திருமதி சரஸ்வதி வேலுப்பிள்ளை

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வேலுப்பிள்ளை 12-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், லிங்கேஸ்வரி, இராசலிங்கம் (ஆசிரியர், ஹற்றன்) குணரத்தினம் - செல்வமணி, காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் பத்மநாதன் (கனடா), செல்வராணி (U.K) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சிவராஜா (மதுவரிப்பரிசோதகர்) மற்றும் சுசீலா (ஆசிரியை, ஹற்றன்), துரைராஜா (ஆசிரியர், சண்டிலிப்பாய் இ.ம.வி.), தனலக்சுமி, கமலாதேவி, ரமேசினி (கனடா), மோகன்ராஜ் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-12-97 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. துரைராஜா
(மருமகன்)

சண்டிலிப்பாய் மேற்கு. (51809)

## முஸ்லிம் வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு, டிச. 14

கொழும்பில் கோடீஸ்வரரான முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்பு அழுக்கடை நீதிமன்றத்துக்குச் சமீபமாக இச்சம்பவம் இடம்பெற்றது.

இவரும் இவரது உறவினரும் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இனந் தெரியாதோர் வாகனத்தை நோக்கிச் சுட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தெமட்டகொடையைச் சேர்ந்த மொஹிதீன் மன்சூர் (வயது 35) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

அவரது உறவினர் கடுமையான காயங்களுடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வர்த்தகரால் நிர்மாணிக்கப்பட்ட "சுப்பர் மார்க்கெட்" கடந்த செவ்வாய் திறந்து வைக்கப்படவிருந்தது. பல விடுதிகளுக்கு (லொட்ஜ்) சொந்தமான இந்த வர்த்தகர் வெளி நாடுகளிலிருந்து பெருமளவில் புடைவை வகைகளை இறக்குமதி செய்யும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தார். (இ-10)


எமது புதிய வெளியீடுகள்!

வினீத் - சோபனா நடித்த
முரட்டுக் காதல்

ராஜாரவீந்தர் - யுவராணி நடித்த
அடுத்த கட்டம்

K. பாலச்சந்தரின்
கையளவு மனசு
(தொடர் நாடகம்)
(பகுதி 1 தொடக்கம் 8 வரை)

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2352)

எக்சலன்ற்
மீசாலை
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்:
15 – 12 – 1997
திங்கள் காலை 9 மணி
(சி/2353)

BOSCO
Institute
25, நக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
Spoken English
by:
BRITTO
ஆரம்பம்:- 14 - 12 - 97
காலை 10 மணி.
தமிழ், ஆங்கிலத் தட்டச்சு வகுப்புகள் நடைபெறுகின்றன.
(51838)

எமது
CD வெளியீடு!
ராஜாதி ராஜா
ஒறிஜினல் வெளியீடு
வேடன்
ஆனந்த ராகம்
சிறையில் பூத்த சின்னமலர்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/2351)


# மரண அறிவித்தல்கள்

## சவுரிமுத்து அந்திரேசுப்பிள்ளை

உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவரான சவுரிமுத்து அந்திரேசுப்பிள்ளை 12-12-97 அன்று காலமானார்.

இவர் அருளம்மாவின் அன்புக் கணவரும், சூசைப்பிள்ளை (செல்வநாயகம், சீநோரா), அமலதாஸ் (லண்டன்), ஸ்ரனிஸ்லாஸ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்), றூபி, இராசமலர் (டென்மார்க்), இராசநாயகம் (ஜேர்மனி), சகாயராணி (ஜேர்மனி), றதீஸ்குமார் (கனடா), ஜாம்சி, சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஸ்ரனிஸ்லாஸ்
(மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(51808)

## அருணாசலம் செல்லாச்சி

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 17, சிவகுருநாதன் வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான அருணாசலம் செல்லாச்சி 13-12-97 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் பசறை வர்த்தகர் வே. த. ஆ. அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், அன்னம், நவரத்தினம், மனோன்மணி, நமசிவாயம் ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகேசு, கமலாதேவி, செல்வரத்தினம், வாசுகிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14-12-97) இன்று ஞாயிறு காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. நவரத்தினம்
(மகன்)

இல 17, சிவகுருநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
[51836]

## தேவன் நாகராஜா

சிங்கைநகர், புலோலி தெற்கைச் சேர்ந்த தேவன் நாகராஜா 9-12-97 அன்று கொழும்பில் மாரடைப்பால் காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், அமுதா (டென்மார்க்), அமிர்தலிங்கம் (டென்மார்க்), தர்மராஜா [சிறி], இளங்கோ (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஆனந்தி [டென்மார்க்], ஸ்ரெல்லா ஆகியோரின் மாமனாரும் விவாகரன், சியாஷ்கரன், நிரோ ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், 13-12-97 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தர்மராஜா (சிறி)
(மகன்)

சிங்கைநகர்,
புலோலி.
(51806)

## கந்தையா செல்லத்துரை

(குரும்பசிட்டி பிரபல சுருட்டு முதலாளி)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வதிவிடமாகவும் தற்போது திருநெல்வேலி கிழக்கு முடமாவடியில் வசித்தவருமாகிய கந்தையா செல்லத்துரை 13-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், நாகரத்தினம், இராசலிங்கம், இராசம்மா, இராசதுரை ஆகியோரின் சகோதரரும், மனோகரன் (கொக்கோ கோலா ஏஜென்சி, மட்டக்களப்பு), மனோராணி, அருட்செல்வன் (கனடா), விஜயகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மகேஸ்வரி (மட்டக்களப்பு), சுந்தரலிங்கம் (முன்னாள் இ.போ.ச. பரிசோதகர், சோண்டாவில்), சிவாஜினி (கனடா), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சதீஸ்குமார், சுகந்தி, மகன் (பிரான்ஸ்), சுதன், கணன், யுகன், மதுரா, டிலுக்ஸன், சிரோமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்பாடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சுந்தரலிங்கம் மனோராணி
(மகள்)

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு.
(51834)

## சிவஸ்ரீ சோமசுந்தரஐயர் சோமாஸ்கந்தக்குருக்கள்

சுன்னாகம் மயிலணி சிவன் கோயில், மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயில் பிரதம குருவாகிய சிவஸ்ரீ சோமசுந்தரஐயர் சோமாஸ்கந்தக் குருக்கள் 13-12-97 சனிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 13-12-97 அன்று மாலை நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. நாகேஸ்வரி அம்மா
(மனைவி)
மக்கள், மருமக்கள்.

(சி/2350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் விமான நிலையம் தீ விபத்தினால் பாதிப்பு!

## இருநூறு விமான சேவைகள் ரத்து!!

லண்டன், டிச. 14

உலகில் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றாக இயங்கிவரும் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் விமான நிலையம் முழுவதுமாக மூடப்பட்டது.

ஓடுதளம் இலக்கம்—1 பகுதியில் சிற்றுண்டி நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ வேகமாக கூரைகளில் பரவி விமான நிலையப் பிரதேசத்தில் புகை மூட்டம் ஏற்பட்டது.

சுமார் 4 மணிநேரத்தில் தீ அணைக்கப்பட்டது. ஆயினும் பாதுகாப்புக் கருதி விமான நிலையம் முழுவதுமாக மூடப்பட்டது.

விமான நிலையத்தின் அன்றாடப் பணிகள் ஸ்தம்பித்தன. 200-க்கு மேற்பட்ட விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டன. மேலும் பல விமானங்கள் தாமதிக்கப்பட்டன. சில விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன. (ஐ)

## 600 தென்னங் கன்றுகள் வேலணையில் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 14

தென்னை பயிர்ச் செய்கைச் சபையினால் யாழ். மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு வரும் வீட்டுத் தோட்ட மானியத்திட்டத்தின்கீழ் நாளைதிங்கட்கிழமை காலை10 மணிக்கு வேலணை பிரதேச செயலகத்தில் வைத்து 600 உயர் இன தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்த வைபவத்தில் தென்னைச் செய்கைபற்றிய கருத்தரங்கும் நடைபெறும்.

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் இதனை நடத்துவார். வேலணை பிரதேச செயலர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 600 உயரின தென்னங்கன்றுகளும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 600 தென்னங்கன்றுகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

இம் மானியத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டம் முழுவதும் 5 ஆயிரம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இவற்றில் இதுவரை 4 ஆயிரத்து 400 தென்னங்கன்றுகள் 8 பிரதேச செயலர் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-4)

## அணு ஆயுத அபிவிருத்தியை பாரதீய ஜனதா ஆதரிக்கும்

### அத்வானி கூறுகிறார்

புதுடில்லி, டிச. 14

இந்தியா தனது அணு ஆயுத திறனை அபிவிருத்தி செய்வதை பாரதீய ஜனதாக்கட்சி ஆதரிக்கும்.

அக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இடைக்காலப் பொதுத் தேர்தலில் ஆட்சிக்கு வந்தால் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் பாரதீய ஜனதாக் கட்சி ஈடுபடுமா என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளிக்கும் போதே அத்வானி இவ்வாறு கூறினார்.

''இந்தியாவை நாம் 21 ஆம் நூற்றாண்டுக்கு இட்டுச் செல்வோம். தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்'' என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## யெல்ட்சின் உடல்நிலை சீராகிறது

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினின் உடல் நிலை தேறி வருவதாக கிரெம்ளின் வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

அவருக்கு காய்ச்சல் தணிந்துள்ளது என்றும் உடல் நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

தடிமன் காய்ச்சல் காரணமாக அவர் மொஸ்கோவில் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரது சுவாசத்தொகுதி கடுமையான வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகி உள்ளது. [ஐ]

## சாவகச்சேரி நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி, டிச. 14

சாவகச்சேரி நகரப்பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

கடந்த புதனன்று சாவகச்சேரி வங்கியொன்றின் முன்னால் நிறுத்தி பூட்டிவிட்டு ஓய்வூதியம் பெறுவதற்குச் சென்ற ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சந்தையில் விடப்பட்ட புதிய சைக்கிளைத் திருடிக் கொண்டு சென்ற நபரை மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்ற இருவர் பின்னர் சைக்கிளை மீட்டு வந்தனர்.

இம்மாதம் கடந்த பத்து நாள்களில் ஆறு சைக்கிள்கள் வரை சாவகச்சேரி நகரப் பகுதியில் திருட்டுப்போயுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-117)

## மண்ணெண்ணெய் விநியோகம்

உரும்பிராய், டிச. 14

உரும்பிராய் பெற்றோல் நிலையத்தில் இப்பகுதி விவசாயிகளுக்கு 10 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. (ஐ- 154)

## அச்சுவேலி கூ.சங்கத்தின் மருந்தகம் விரைவில் திறப்பு

அச்சுவேலி டிச. 14

வலி.கிழக்குவடபகுதி(அச்சுவேலி) பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கு நியாய விலையில் ஆங்கில மருந்து வகைகளை விற்பனை செய்வதற்காக மருந்தகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

அச்சுவேலி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நிறுவப்படும் கட்டடத்தில் மருந்தகம் மிக விரைவில் செயற்படும் என பொது முகாமையாளர் த கவீந்திரதாஸ் தெரிவித்தார். (ஐ-11)

## ஒரே நாளில் 7 சடலங்களில் பிரேத பரிசோதனை

நெல்லியடி, டிச. 14

மந்திகை மருத்துவமனையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் ஏழுசடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

தாக்குதல் சம்பவத்தில் பலியான இருவரதும், பதுங்குகுழி வெள்ளத்தில் பலியான தாயும் குழந்தைகளுமாக மூவரும், நஞ்சருந்தியும், கழுத்தில் சுருக்கிட்டும் பலியான வயோதிபர்கள் இருவருமாக மொத்தம் ஏழு பேரின் சடலங்களே பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அங்கு கடந்த சில வருடகாலத்தில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையான சடலங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகுமென பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (உ-107)

## மாத்தளை தமிழருக்கு 6 மாத சிறை

கொழும்பு, டிச. 14

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவருக்கு தனக்குச் சொந்தமான வீட்டை மாதமொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் ஒன்றரை ஆண்டுகளுக்கு வாடகைக்கு கொடுத்ததாகக் கூறப்படும் மாத்தளையைச் சேர்ந்த முத்து ஈஸ்வரவேல் என்பவருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ஐ-10)

**O/L, Yr. 10, 9, &8**

புலமைப் பரிசில் Yr. 5

**புதிய வகுப்புக்கள்**

ஆரம்பமாகியுள்ளன.

**99 PURE/APP.**

தொடைகளும் சார்புகளும்

தொடர்பு வேகம்

திரு. சிவலோகநாதன்

B. Sc.

**SHAMROCK**

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இ. இராஜதுரை

எமது வகுப்பு சகமாணவி

### செல்வி இ. காயத்திரியின்

அன்புத் தந்தையார்

இறைபதம் அடைந்ததை அறிந்து மிக வேதனை அடைகின்றோம்.

ஆற்றொணாத் துயரில் ஆறுதல் இன்றி
தவிர்க்கும் எமதருமை நண்பியே!
அருகினில் ஓடிவந்து ஆறுதலாய்
சிலவார்த்தை கூறி உன்னை
தேற்றிடத்தான் முடியவில்லை,

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உன்துயரில் நாமும்:
மாணவ, மாணவிகள்
98 ஆம் ஆண்டு வர்த்தக பிரிவு
**COLLEGE OF COMMERCE**

[51822]

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

எமது நண்பி

### காயத்ரி இராஜதுரையின்

அன்புத் தந்தையார்

### அமரர் இராஜரட்ணம் இராஜதுரை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியடைகின்றோம்.

பாசத்தைப் பொழிந்தே ''அங்கிள்''
பலரையும் ஈர்த்து விட்டீர்!
சித்தம் கலங்குதே ''அங்கிள்''
செய்வதறியாது திகைக்கின்றோம்.

ஆற்றாத் துயரிற்கு அருகிலிருந்து ஆறுதல் கூற முடியவில்லையெனினும் அங்கிளின் ஆத்ம சாந்திக்காகவும் அவரின் ஜீரணிக்கமுடியாத இந்த பேரிழப்பைத் தாங்கும் மனோவலிமையை அவரது குடும்பத்தினர் பெற்றுக் கொள்ளவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆருயிர் நண்பிகள்

(51789)

## மூன்றாம் மாத நினைவஞ்சலி



| தரணியில்: | விண்ணில்: |
|---|---|
| 25 | 15 |
| 07 | 09 |
| 1975 | 1997 |

### அந்தோனிப்பிள்ளை ஜெசிற்ரா

(இளவாலை புனித நீற்றம்மா பங்கைச் சேர்ந்தவரும் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி.)

அன்பு மகளே ஜெசி ஆசை மகளே நீ எங்கே?
பாசம் என்றால் என்னவென்று புரிய வைத்த உனக்கு
பழகிப் பிரிவது துயரமென்று புரியாமற் போனதோ!
அன்பு காட்ட அன்னை நானிருக்க ஆதரவு காட்டச் சகோதரிகளிருக்க
உன் குறை தீர்க்கச் சகோதரரிருக்க
சொந்தமும் சிநேகிதமும் உன் நினைவு நிறைந்திருக்க
என் செல்வமே! கொடுமை மிகு காலனவன் கொண்டு போனதேனோ?
நீ சென்ற பாதையுந் தெரியாது, போன இடமும் தெரியாது
தொடர்ந்து வரவும் முடியாது தவிக்கின்றோம்......
மாதம் மூன்று சென்றதம்மா மாறுதில்லை உன் துயரம்
எத்தனை ஆண்டு சென்றாலும் ஆறமாட்டோம் கண்மணியே!
மகளே! உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக (15 - 12 - 97) திங்கள் அன்று செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்!

தாய்:- செல்வராணி
சகோதரர்:- மனோ, றவி (ஜேர்மன்)
சகோதரிகள்:- பாப்பா றஜனி, நிர்மினி, ஜெனோ, றதி, (ஜேர்மன்)
மைத்துனன்:- மெண்டிஸ்பெலோ (ஜேர்மன்), தவேந்திரன்
மைத்துனி:- நந்தினி
பிள்ளைகள்:- இந்து, சுரேன், ஸ்ரெவான், ஸ்ரெலானி,
மருமகன்:- துஷான், டெனோ

(51826)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறைச் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பெரிய இரும்புப்பெட்டி (Iron save) (திண்டுக்கல் பெட்டி) ஒன்று குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(51669)

கதிரை செற், கட்டில்கள், Dressing Table, சாப்பாட்டு மேசை, அலுமாரி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 25, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [51784]

## புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் 1998 பயிற்சிப்பரீட்சை வினாத்தாள்கள், விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். [51759]

## மீனவர் நிவாரணம்

நெல்லியடி, டிச. 14

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்தார். (ஐ-109)

## மலியம் கல்வி நிறுவனம்

**N. C. A**

1 ஆம் கட்டை,
பருத்தித்துறை
98 ஆம் ஆண்டுக்கான
**ஆண்டு 1 - 11 வரை**
சகல வகுப்பும்
2000 ஆண்டுக்கான
கலை, வர்த்தகம்,
விஞ்ஞானம்
ஆரம்பம்: **18 - 12 - 97**
நிர்வாகி
(51786)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(51747)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (B.oiler) விற்பனைக்குஉண்டு. இல. 101 பலாலி றோட், (இலுப்பையடிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம் (வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை உண்டு).
[51796]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. ஒருகிலோ கிராம் 140/- தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம், (சுத்தம் செய்து கொடுக்கப்படும்).
[51701]

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேடஸ், சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு (சுத்தம் செய்து கொடுக்கப்படும்) தொடர்பு No 68, Old Park Road, Jaffna
[51812]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்து கொடுக்கப்படும்). தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அருகில்.)
[51778]

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 317B நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[51777]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[51773]

இறைச்சிக் கோழி (புறோயிலர்) இறைச்சிச் சேவல் விற்பனைக்குண்டு. A M T. ஸ்ரோர்ஸ் (சிறி கடை). தபாற்கட்டைச் சந்தி, அரியாலை.
(51774)

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R S K. கோழிப்பண்ணை, மானஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் விலை 1 கிலோ கிறாம் 130/-
(51283)

Broilers இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. கிலோ Life Weight 140/-. சுத்தம் செய்து கொடுக்கப்படும். (5) 17 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடையில்)
(51816)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும, சில்லறையாகவும் விற்கப்படும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தினந்தோறும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales conter palaly Ro.d, Thirunelvely
(51818)

## மணப்பெண்கள் தேவை

15 வருடமாக ஜேர்மனியில் தொழில் புரியும் நிரந்தர வதிவுடைமையுள்ள 32 வயது மணமகனுக்கு ஓரளவு படித்த அழகுள்ள மணமகள் உடன் தேவை. மணமகன் வந்து திருமணம் செய்வார். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது (வயது 25 இல் இருந்து 28 வரை) சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: சுகுணா ஜெயவீரசிங்கம், நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு.
[51815]

உள்ளூர் அரச உத்தியோகத்தர்கள் பதினைந்து பேருக்கு, வியாபாரிகள் ஏழு பேருக்கு கல்வியுள்ள அழகான மணப்பெண்கள் தேவை. நேரடித் தொடர்பு: காலையில் மட்டும் தொடர்பு. முத்துக்குமாரு செல்லப்பா. புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
(51681)

## கோழி மருந்து

14-12-97 ஞாயிற்றுக்கிழமை குஞ்சுகளுக்கான கம்புறோ 1 ஆவது, 2 ஆவது மருந்துகள் வழங்கப்படும் மற்றும பவுல்பொக்ஸ் (ஊசி) மருந்துகளுக்கும் பதிவு செய்து கொள்ளவும், எம்மிடம குஞ்சுகள் எடுத்தவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும். "மல்லிகாபதி" மானிப்பாய். [51790]

## கல்வி

ஆங்கில இலக்கணம், சட்டுரை, கடிதம் எழுதுதல் ஸ்போக்கன் இங்கிலிஷ் யாவும் தபால் மூலம் பயிற்றப்படுகிறது விபரங்கட்கு, முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: G M. J Joseph. 76. Maha Veethiya, Negombo [51708]

## கணிதம் 98

ஆண்டு 5 இல் இருந்து ஆண்டு 11 வரை கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், சித்திப்புள்ளி அடையாதவர்களுக்கும 32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால 40 மணித்தியாலங்களில் விஷேட சித்திக்கு கற்பிக்கப்படும. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [51702]

## திருமணசேவை

37வயது ஆசிரியருக்கு ஆசிரியரானமணபபெண் தேவை. இன்னும் பல தொழில்களில் எம்மிடம் குறிப்புக்களுண்டு. நேரில் / கடிதமூலம் தொடரவும். இயக்குநர் விநாயகா திருமணசேவை, 11, முதலாம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம் [51811]

## FOR SALE

Brand new Yamaha DSR 310 Organ. stand (Black), back contact:- Mr. Thayananthan, 185, Kasthuriyar Road 91, Aadiyapatham veethy, Thirunelvely.
(51805)

★ காஞ்சிபுரம் பட்டு சாறி வகைகள்,
★ மணிப்புரி சாறி வகைகள்,
★ கூறை சாறி வகைகள்,
★ மைசூர் சில்க்ஸ் சாறி வகைகள்,
★ சகல விதமான சேட்டிங், சூட்டிங்
★ மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகளுக்கும்

**நீங்கள் நாட வேண்டிய இடம்:**

# லிங்கம் சில்க் ஹவுஸ்

**1?, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

இல. 21. மேல்மாடி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(51792)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை அறிவித்தல்

# விசேட பொதுக் கூட்டம்

**21 - 12 - 97**

யாழ்ப்பாணம் மாவட்டக்கூட்டுறவுச் சபையின் விசேட பொதுக்கூட்டம் 21. 12. 97 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சபைத்தலைவர் திரு. பெ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்திற்கான அழைப்புக்கடிதமும, நிகழ்ச்சி நிரலும சகல அங்கத்துவ சங்கங்களினதும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்கள் சபையுடன் தொடர்பு கொள்வதோடு, சகல அங்கத்துவ சங்கங்களினதும பிரதிநிதிகள் பொதுக்கூட்டத்தில பங்குபற்றி ஒத்துழைப்புவழங்குமாறு அறியத்தருகின்றோம்.

செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
(சி/2344)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 10 — 1914

மறைவு: 08 — 12 — 1995

## சரவணமுத்து செல்லத்துரை

(வர்த்தகர், அராலி)

திதி: 14—12—97

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய் இருந்து எம்மை எல்லாம் விட்டு அகன்ற எம் அன்புத் தந்தையின் ஈராண்டு நினைவலைகள் எம்மை விட்டகலாது.

- குடும்பத்தினர்

"தர்மகிரி",
அராலி கிழக்கு.
அராலி.
(51764)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திரு. நிற்சிங்கம் குருகுலசிங்கம்

[பிரதம லிகிதர். தபால் தந்தி திணைக்களம்]

காட்சி: 9 - 02 - 1929

நிறைவு: 14 - 11 - 1997

புன்னகை மின்னும்தோற்றம் புகழிலும் பணியும் ஏற்றம்
சன்னரும் திறத்தினாலே சபைகளை ஈர்க்கும் ஆற்றல்
சீலத்தால் அறிவால் வாழ்க்கைச் செம்மையால் சிறந்து நின்ற
ஞாலத்தில் ஒருவனான அண்ணலே அடைக நீ.
சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பாமா வாசா',
சோழங்கன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(51798)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈவினை அஸ்பெஸ்டஸ் ஊழியர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

ஈவினை அஸ்பெஸ்டஸ் நிறுவன ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து இம்மாத முடிவுக்குள் ஜனாதிபதியுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

ஈவினை அஸ்பெஸ்டஸ் நிறுவன ஊழியர் சங்கத்தினருக்கும், ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கொழும்பிலுள்ள டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டபோதே அவர் இந்த உறுதி மொழியை அளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பங்குபற்றினர்.

ஈ.பி.டி பி. யாழ். அமைப்பாளர் வி. கே. ஜெகன், காரியாலயப் பொறுப்பாளர் க. நிஷாந்தன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் ஈ. பி.டி. பி. சார்பாக பங்குபற்றினர். (இ-3)

# 143 நிலையங்களில் ஜி.சீ.ஈ. பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 14

ஜி. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சை யாழ். மாவட்டத்தில் 143 பரீட்சை நிலையங்களில் கடந்த வியாழனன்று முதல் நடைபெறுகிறது. சுமார் 28 ஆயிரம் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

யாழ். கல்வி வலயம் ஒன்றில் 62 நிலையங்களிலும், வலயம் இரண்டில் 81 நிலையங்களிலும் பரீட்சை நடைபெறுகின்றது.

வன்னிப் பகுதிகளில் தங்கியிருந்தபோது பரீட்சைக்கு விண்ணப்பித்து, தற்போது யாழ். மாவட்டம் திரும்பியுள்ள மாணவர்களுக்கும் புதிய அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு பரீட்சை எழுத வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை — சுற்றிவளைப்புக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் பரீட்சை எழுதும் மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்குத் தடையின்றிச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9)

# பல்கலை. மாணவர் யாழ்.வர பயண வசதி செய்யப்படும்

## சோமபால குணதீர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 14

போக்குவரத்து வசதி இன்மையால் யாழ். திரும்ப முடியாமல் தவிக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் இங்கு வருவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவரும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமுமான சோமபால குணதீர உறுதியளித்துள்ளார்.

யாழ். வந்துள்ள அவர் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராஜாவைச் சந்தித்துப் பேசிய போது இந்த உறுதி மொழியைத் தெரிவித்தார்.

பல்வேறு தேவைகள் கருதி யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்ற பல்கலைக் கழக மாணவர்கள் மீண்டும் இங்கு வருவதற்கு சீரான பிரயாண வசதி இன்மையால் மிகவும் சிரமப்படுவதாக அறிந்தேன். அவ்வாறு சிரமப்படும் மாணவர்கள் திருகோணமலை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டால் அவர் மாணவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குத் தேவையான கப்பல் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பார். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் தாம் அவருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வதாகவும் குணதீர மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# மரபுக் கவிதை போட்டி முடிவு

நெடுந்தீவு, டிச. 14

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய நாவற்குழியூர் நடராசன் நினைவு மரபுக் கவிதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் நெடுந்தீவுக் கவிஞர் கவிமாமணி பண்டிதர் க. த. ஞானப்பிரகாசம் முதற் பரிசு பெற்றுள்ளார். இவருக்கு ரூபா 10ஆயிரமும் சான்றிதழும், வழங்கப்படவுள்ளது.

நாவற்குழி மேற்கு செல்லையா குமாரசாமி இரண்டாவது பரிசையும், மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த செல்வி கு. பாரதி மூன்றாவது பரிசையும் பெற்றுள்ளனர்.

கல்முனை மு. கடாட்சரம், மூதூர் ஏ. எம். முனஹதீன் ஆகியோருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-111)

# கிளிநொச்சியில் அமுக்கவெடி மீட்பு

கொழும்பு, டிச. 14

கிளிநொச்சி மாவட்டத்தில் சங்கரத்தை வயல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த துருப்பினர் விடுதலைப் புலிகள் புதைத்து வைத்திருந்த அமுக்க வெடி ஒன்றை கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

14 கிலோ நிறையுள்ள இந்தக் குண்டை இராணுவத்தினர் பின்னர் செயலிழக்கச் செய்தனர். (இ 9)

# சுவர் இடிந்து குழந்தை பலி

வவுனியா, டிச. 14

மூத்தையன்கட்டுப் பகுதியில் அருணா வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடு ஒன்றின் சுவர் கடும்மழை காரணமாக இடிந்து வீழ்ந்ததில் ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக இறந்தது.

இறந்த குழந்தை இடம்பெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை என தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## பொதுமக்கள் போக்குவரத்துக்கு

# பூவரசங்குளத்தில் புதிய தடை முகாம்

கொழும்பு, டிச. 14

''ஜெயசிகுறு'' இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்டுள்ள தாண்டிக்குளம் தடைமுகாமுக்குப் பதிலாக பூவரசங் குளத்தில் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகத் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து வடக்கே செல்வோர் முன்னர் தாண்டிக்குளம் தடை முகாம் ஊடாகவே வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இந்த வழி ''ஜெயசிகுறு'' இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்டது. அதன் பின்னர் வடபகுதி செல்வோர் வவுனியா—மன்னார் வீதியில் உள்ள பறையனாலங்குளம் சென்று அங்கிருந்து மாற்றுவழி ஊடாக வடபகுதி சென்றனர். அதைத் தொடர்ந்து பறையனாலங்குளத்தில் தற்காலிக சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டது. இந்தச் சோதனைச் சாவடியும் அண்மையில் மூடப்பட்டது.

தற்போது வவுனியா — மன்னார் வீதியில்—9 மைல் தூரத்தில்—அமைந்துள்ள பூவரசங்குளத்தில் புதிய தடை முகாம் ஒன்று திறக்கப்படவுள்ளது. இந்தத் தடை முகாம் திறக்கப்பட்டவுடன் வடபகுதிக்கான பொதுமக்கள் போக்குவரத்துக்கள் அனைத்தும் இந்த வழி மூலமாகவே அனுமதிக்கப்படும் எனத் தெரிய வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# யாழ். பல்கலை வளாகத்திலும் நாணயத் தொலைபேசி

யாழ். பல்கலைக் கழகத்திலும் நாணயக் குற்றிகள் மூலம் இயங்கும் தொலைபேசி பொருத்தப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட மாணவர்கள் பலர் இங்கு கல்வி கற்கின்றனர். அவர்கள் தமது உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த துணைபுரியும் நோக்கிலேயே இது அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இது போன்ற நாணயத் தொலைபேசிகள் ஐந்து யாழ். நகரின் பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஐ-9)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் வங்கிக் கடன் பெற வசதி

கொழும்பு, டிச. 14

தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலகு கடனாக 35 லட்சம் ரூபா பெறக்கூடிய விசேட திட்டம் ஒன்றை அரச வங்கிகள் தயாரித்துள்ளன எனத் தெரியவருகிறது.

இந்த விசேட கடன் திட்டத்தின் கீழ் வாகனக் கொள்வனவுக்காக 14 வீத வட்டியுடன் ரூபா 15 லட்சமும், காணி அல்லது வீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 14 வீத வட்டியுடன் ரூபா 15 லட்சமும் பாவனைப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக 10 வீத வட்டியுடன் ரூபா 5 லட்சமும் வழங்கப்படும் எனத் தெரியவருவதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

# மீளப்பட்ட இறைமையினால் தமிழர்களுக்கு ஆட்சியுரிமை உண்டென நிறுவியவர் "திரு"

அமரர் மு. திருச்செல்வத்தின் இருபத்தோராவது நினைவு தினம் கடந்த மாதம் 22ஆம் திகதியாகும். அவரது நினைவு தினம் அண்மையில் கொழும்பில் கொண்டாடப்பட்டது. அவரது நினைவை மீட்கிறது இந்தக் கட்டுரை.

அமரர் மு. திருச்செல்வம் ஈழத் தமிழருக்குத் தமது உயிலாக விட்டுச் சென்றிருக்கும் ''ஈழத்தமிழர் இறைமை' என்ற நூல் தமிழர்கள் எல்லோரும் தமிழ் மாணவர்கள் எல்லோரும், கற்க வேண்டிய ஒன்றாகும்.

அவர் அந்த நூலை எழுதுவதற்குக் காலாக அமைந்திருந்தது சட்டத்துறையில் பெரும் பரபரப்பை உண்டாக்கிய ''டரயல் அற்பார்'' நீதிமன்ற வழக்காகும்.

1976 மே 22 ஆம் நாள் அப்போதைய அரசு குடியரசு நினைவு நாளைக் கொண்டாடியது. அந்நாளில் தந்தை செல்வா தலைமையில் தமிழ்த் தலைவர்கள், மீண்ட இறைமையைப் பயன்படுத்தும் ஆட்சியுரிமையைப் பெறுவதற்குரிய வட்டுக்கோட்டைத் தீர்மான வாசகத்தை அச்சிட்டு ஈழமெங்கும் மக்களுக்கு விநியோகித்தார்கள்.

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தில் வைத்து வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மக்களுக்கு கூறியதற்காக, மக்களைத் தூண்டியதற்காக அத்தீர்மானப் பிரதிகளை விநியோகித்த நால்வர் அரசினால் கைது செய்யப்பட்டு, பத்து நாள்கள் காவலில் வைக்கப்பட்டார்கள். இந்தநால்வர் மீதும்' இராஜத்துரோகம்'' செய்ததாகக் குற்றம் சாட்டி கொழும்பில் மூன்று நீதிபதிகள் அடங்கிய மேல் நீதிமன்றம் முன்பு வழக்குத் தொடரப்பட்டது.

மேற்படி குற்றச் சாட்டையொட்டிய வழக்கு பாரதூரமான விளைவுகளைச் சட்டத்துறையிலும் அரசமைப்புத் துறையிலும் ஏற்படுத்தியது. அரசியலமைப்பு உறுதி செய்யும் பேச்சுரிமையை அவசரகால விதிகள் மூலம் ஆட்சியாளர் தடைசெய்ய முடியுமா? தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் ஒருவரோ, கட்சித் தலைவர் ஒருவரோ தேசிய அரசுப் பேரவையில் உள்ள தீர்மான முன்மொழிவு பற்றித் தனது தொகுதி மக்களுக்கு எடுத்துக் கூறுவது அவசரகால விதிகளின் கீழ்க் குற்றமாகுமா? துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் வழங்குவது ராஜத்துரோகமாக அமையுமா?

மேற்படி அடிப்படைக் கேள்விகளை எடுத்து நோக்கு முன்பு மேற்படி தமிழ்த் தலைவர்கள் நால்வரையும் விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ''ட்ரயல் அற்பார்'' நீதிமன்றத்துக்கு அந்த வழக்கை விசாரிப்பதற்குச் சட்டவலுவுண்டா என்பதையும் செல்லுபடியானதா? என்பதையும் எடுத்து நோக்குவது என அவ்வழக்கில் ஏற்பட்டு வாதாடிய மூத்த சட்டத்தரணிகளான தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், வி. எஸ். ஏ. புள்ளைநாயகம் ஆகியோர் தீர்மானித்தனர்.

மேற்படி சவால் இருமுனைகளாய் அமைந்தது. சட்டத்துக்குப் புறம்பான, செல்லுபடியற்ற அரசமைப்பின் அடிப்படையில் ''ட்ரயல் அற்பார்'' நீதிமன்றம் அமைக்கப்பட்டது என்பது [illegible] அவசரகால விதிகளின் கீழ் ''ட்ரயல் அற்பார்'' நீதிமன்றம் அமைக்கப்பட்டது என்பது இரண்டாவது முனை.

அரசமைப்புச் செல்லுபடியற்றது என்பது தொடர்பான வாதங்களை வழக்குரைக்கும் முழுப் பொறுப்பையும் திருச்செல்வம் ஏற்றுக் கொண்டார். சட்ட நுண்ணறிவு, வழக்குரை வாதத்திறன் அரசியலமைப்புக் கொள்கையில் நுண்மா நுழைபுலம், தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடு ஆகிய அத்தனை துறைகளிலும் புலமையுடன் கூடிய ஆய்வுத் திறமை பெற்றிருந்தார் திருச்செல்வம்.

## இயக்கப்பணி

பதில் தலைமை நீதியரசர் குறிப்பிட்டது போன்று, திருச்செல்வம், தமது பணியை வெறும் வழக்குரையாகக் கொள்ளாது தாம் சார்ந்த இயக்கப்பணியாகவே எடுத்துக் கொண்டார். தமது வாதங்கள் பற்றி ஆழ்ந்து படித்தார், ஈடுபட்டுப் பணிபுரிந்தார், போர்த்துக்கேயர் காலம், அதற்கு முந்திய காலம் பற்றிய தமிழ் ஈழ வரலாறுகள் குறித்த அடிப்படை வரலாற்று நூல்களையும் படித்தார். அக்காலப் பகுதியைக் கற்றறிந்த அறிஞர்களுடன் கலந்துரையாடினார்.

வழக்குரை வாதமாக தாம் கூறிய கருத்துக்களைச் சாதாரணத் தமிழ் இளைஞர் ஒவ்வொருவரும், தமிழ் மாணவர் ஒவ்வொருவரும் தமிழ்க் குழந்தை ஒவ்வொன்றும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதால் சாதாரணத் தமிழ் மக்களும்விளங்கிக், கொள்ளக்கூடியதாக 'ஈழத் தமிழர் முறைமை' எனும் தலைப்பில் ஒரு நூலாகவே விட்டுச் சென்றுள்ளார் அமரர் திருச்செல்வம்,

''விடுதலை, தன்னுரிமை இறைமை, தன்னாதிக்கம், ஆட்சியுரிமை என்பன உடைய மக்களாட்சிக் குடியரசாக தமிழ் ஈழக் குடியரசை அமைத்து வாழவும், பேணவும், பாதுகாக்கவும், அதனால் தமிழ் மக்களும் உலகமும் நன்மையடைய வாழ்வதற்கும் உறுதி பூணுவோமாக!'' —என்றும்

''தமிழ் ஈழக் குடிமகனின் இறைமை மீளப்பட்டுள்ளது. அந்த இறைமையைப் பயன்படுத்தி ஆட்சி அமையக் கூடிய ஆட்சியுரிமையைப் பெறுவது ஈழத்தில் உள்ள தமிழர் ஒவ்வொருவரின் புனித கடமையுமாகும்'' எனவும் அறைகூவல் விடுத்துச் சென்றவர் அமரர் திருச்செல்வம். ★

— த. இன்பரசு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எலைற் கல்வி நிறுவனம்
## ELITE INSTITUTE

99, மானிப்பாய் வீதி, (5 சந்தி) யாழ்ப்பாணம்

**புதிய வகுப்புக்கள் (1998)**

ஆரம்பம்: **14—12—1997** ஞாயிறு காலை 8-30 மணி

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் விசேட வகுப்புக்களும் பயிற்சிப் பரீட்சைகளும்

**ஆண்டு 3 முதல் G. C. E. (O/L) வரை**

சகல பாடங்களும்

விசேடபெறுபேறுகளுக்கு நாடுங்கள்.

(எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை)

(51795) - நிர்வாகி

# ராஜன் சயிக்கிள் வேக்ஸ்
## ஸ்தாபனத்தாரின்
# புத்தாண்டு நற்செய்தி!

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

- ★ ஆண்கள் பெண்களுக்குரிய சயிக்கிள்
- ★ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
- ★ றேடியோ ★ மணிக்கூடு
- ★ T. V. ★ டெக் ★ ஜெனரேற்றர்

மற்றும்

- ★ எமது ஸ்தாபனத்தின் விற்பனைப் பொருள்கள்

எமது நிபந்தனைக்கு இணங்க

**தவணை முறையில் பெற்றுக் கொள்ளலாம்**

விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ராஜன் சயிக்கிள் வேக்ஸ்**

பிரதான வீதி, பருத்தித்துறை.

(51750)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

**இராஜதுரை காயத்திரி**

அவர்களின் அன்புத் தந்தையார்

**இ. இராஜதுரை**

அவர்கள் 11-12-1997 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நண்பர்கள்,
98 வர்த்தக பிரிவு,
பொஸ்கோ கல்வி நிலையம்.

(51780)

# 110 பேருக்கு ரூபா 5 ஆயிரம்

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் (ஜே-146) பிரிவில் மீளக் குடியமர்வுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு 110 பேருக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது. இவர்களின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் வங்கி கணக்குக்கு இக் கொடுப்பனவை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

வெளிவாரிப் பரீட்சைகள்
கல்வியாண்டு
1995 -- 96

முதற் கலைத்தேர்வு-1996
முதல் வர்த்தகத்தேர்வு - 1996

மேற்படி பரீட்சைகள் 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி (திங்கட்கிழமை) ஆரம்பமாகவுள்ளன. இப்பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன.

இதற்கான நேரசூசியையும், அனுமதி அட்டையினையும், வவுனியா வளாகத்தில் பரீட்சை எடுப்பதற்கு விண்ணப்பித்தவர்கள் மட்டும்வவுனியா வளாகத்திலும், ஏனையோர் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் 17-12-1997 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
(சி/2343)

# கூறுவிலை கோரல்

விவரம் பின்வருமாறு:-

01. இரும்புப் பெட்டிகள் திருத்தம் செய்தல் - 05 பெட்டிகள்
02. தகரப் பந்தல் புதிதாகத் தயாரித்தல் - 120 அடி நீளம்
03. இரும்புக் கதிரைகள் புதிதாகத் தயாரித்தல் - 500 கதிரைகள்

மேற்கூறப்பட்டவைகளைச் செய்வதற்கான கூறுவிலைகளைக் கோருவோர் இதற்கான முழு விவரங்களையும் சங்கக் காரியாலய நேரத்தில் வந்து பார்வையிட்டு எதிர்வரும் 20-12-1997-ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக வலி. கிழக்கு வ.ப.ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

- பொது முகாமையாளர்

(சி/2340)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

மரக்கறி வகைகளை விற்பனை செய்பவர்களுக்கும், வீதியோர வியாபாரிகளுக்கும் மற்றும் அனுமதியின்றி கட்டடங்களை அமைப்போருக்குமான

# அறிவித்தல்

கணிசமானளவு மரக்கறி வியாபாரிகள், பருத்தித்துறை மீன்சந்தையினுள்ளும் அதன் சுற்றுப் புறங்களிலும் வியாபாரம் செய்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்தும் வகையிலும் பொது மக்களுக்கு இடையூறாகவும் வீதியோர வியாபாரிகள் தொகையும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. இத்தகைய ஒழுங்கீனமான செயற்பாடுகளுக்கெதிராக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளாமல் நகராட்சி மன்றம் பாராமுகமாக இருந்துவிட முடியாது. எனவே, மீன் சந்தையினுள்ளும் அதன் சுற்றுப் புறங்களிலும் மீன் வியாபாரிகள் தவிர்ந்த வேறு எவரும் — குறிப்பாக மரக்கறி வியாபாரிகள் எவரும் வியாபாரம் செய்வதை நிறுத்திக் கொள்வதுடன், வீதியோர வியாபாரிகளையும் அவ்விடங்களை விட்டு விலகிச் சென்று நகராட்சி மன்ற நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், நகராட்சி மன்றத்தின் அனுமதியின்றி கட்டட அமைப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் இது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, சுற்று மதில்கள் உட்பட எவ்வித கட்டட அமைப்புக்களையும் அமைக்க எண்ணியுள்ளோர் முதலில் நகராட்சி மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டட அமைப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ந. சோமசுந்தரம்,
செயலாளர்
நகராட்சி மன்றம் பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 10—12—1997 (சி/2341)

# BASF

## விவசாயிகளே இதோ!

# பி(F)ன் பொஸ் 40

- ★ நெல் இலைமடிச்சுக்கட்டி ★ இலை சுருட்டிப்புழு
- ★ சந்துகுத்தி ★ இலையரிபுழுக்களுக்கும்
- ★ உருளைக்கிழங்குச் செய்கையில் கறையான்
- ★ எறும்பு போன்றனவற்றைக் கட்டுப்படுத்தவும்

அதிசிறந்தது

**பின்பொஸ்**

**மற்றுமொரு கிருமிநாசனி**

# டயசின்

பின்லே நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்றது.

விவசாய இரசாயன விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BASF Finlay (pvt.) Ltd,**

186, Vauxhall Street, Colombo - 2

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்)

(சி/2348)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1923 — 03 — 13

இறப்பு: 1994 — 11 — 18

## அமரர் சேனாதி சண்முகநாதன்
(கிளி)

திதி: 14 — 12 — 1997

தேனாகி ஒளி சிந்தும் பொன் நிலவில்
தெய்வமாய் வாழும் சண்முகநாதன்
நாளும் பொழுதும் பிள்ளைகளை வாழ்த்திட
நான்கு தமிழால் கவிதைகள் வரைவோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செட்டித்தெரு, நல்லூர். (51817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் வடிசாலை இயங்காததால் சங்கங்களை மூடவேண்டிய நிலை

தென்மராட்சி, டிச. 14

திக்கம், வரணி ஆகிய வடிசாலைகளுக்கு முன்னர் கள் வழங்கி வந்த சில பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள் விரைவில் மூடப்படும் அபாய நிலையில் உள்ளதாகத் தெரியவருகிறது.

திக்கம், வரணி வடிசாலைகளில் இருந்து லட்சக்கணக்கான ரூபா பாக்கிப் பணம் வழங்கப்படாமல் உள்ளதால் இச்சங்கங்களை இயக்குவதற்கு நிதி இல்லாத நிலையில் சங்கங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் கள் வழங்கிய சங்க அங்கத்தவர்களுக்குரிய கொள்வனவுப் பணத்தை கொடுக்க முடியாத நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. சங்கங்கள் கொடுப்பனவை வழங்க முடியாத நிலையில் உள்ளதால் சங்க அங்கத்தவர்கள் தொடர்ந்து கள் வழங்குவதை நிறுத்தியுள்ளனர். இதனால் சங்க ஊழியர்களுக்கே வேதனம் வழங்க முடியாத நிலை ஏற்படலாமெனவும் இதனால் சங்கங்களை மூடும் நிலை உருவாகலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கொத்தணி பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களுக்கு திக்கம், வரணி ஆகிய வடிசாலைகளிலிருந்து இரண்டு கோடி ரூபாவுக்கு மேலான பணம் வழங்கப்படாமல் பாக்கியாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## மைசூர்ப்பருப்பு தட்டுப்பாடு நீங்கியது

வடமராட்சி, டிச. 14

யாழ். குடாநாட்டில் மைசூர் பருப்புக்கு இருந்து வந்த தட்டுப்பாடு நீங்கி வருகிறது.

சில இடங்களில் பங்கீட்டு அட்டைக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் மைசூர்ப் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் கடைகளில் மைசூர்ப் பருப்பு கிலோ 60 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஐ-173)


## யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1997 ஆம் ஆண்டு 4 ஆம் காலாண்டுக்கான ஆதனவரியை 31. 12. 97 புதன்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம். எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

வெற்றுக்காணிகள்
மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
ஏனைய காணிகள் -20%

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்' என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

11 - 12 - 97 (சி/2342)

## ஓராண்டு நீங்காத நினைவு



அமரர் கந்தையா கனகரத்தினம்

அன்னை மடியில்: 20-06-1938
ஆண்டவன் அடியில்: 25-11-1996
திதி: 14-12-1997

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
அன்பு நெறிகாட்டி எம்மை வாழவைத்த தெய்வமே!
பாதி வழியில் எம்மைப் பரிதவிக்க விட்டு
விண்ணுலகம் சென்றனையோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமகன்,
உற்றார், உறவினர்.

க. யசீந்திரன் (மகன்)
அப்பிளாவளை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(51765)

## பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு
கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம்: 15 - 12 - 1997 திங்கள்
சனி, திங்கள் 4-30 — 5 30
பழைய நேரம்
இடம்:-
(தபாற்பெட்டி சந்திக்கு முன்பாக
தாளையடி லேன்)
திருநெல்வேலி
ஆசிரியர்:
திரு. நித்தியானந்தராஜா
(51821)

## மணியம் கல்வி நிறுவனம்

1 ஆம் கட்டை,
பருத்தித்துறை.
ஆண்டு 5
விசேட பயிற்சி பரீட்சை
புலமைப் பரிசில் வகுப்பு
ஆசிரியர்:
திரு. சுப்பிரமணியம்
ஆரம்பம்: 21 - 12 - 97
— நிர்வாகி
(51787)

## பரிசாரகர்கள் தெரிவுக்கான பரீட்சை - 1997

அண்மையில் சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எனது பணிமனையில் 20—12—97 காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் கீழ்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. தேசிய அடையாள அட்டை
2. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
3. கல்வித் தகைமைச் சான்றிதழ் (மூலப்பிரதியுடன் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதி ஒன்று)
4. அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பத்திரங்கள் (அதில் ஒன்று கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட வேண்டும்)

வைத்திய கலாநிதி
[செல்வி] என். கனகரத்தினம்
பணிப்பாளர்
(சி/ 2347)

## உ
## கொழும்புத்துறை மேற்கு அருள் மிகு வதிரிபீடம்
மன்றுளாடும் பெருமான்
விநாயகமூர்த்திப் பிள்ளையார் தேவஸ்தானம்
## சிவகாமசுந்தரி சமேத நடராசப்பெருமானின் நூதன ஆலய பிரதிஸ்டா
## கும்பாபிஷேகம்

கார்த்திகைத் திங்கள் 29 ஆம் நாள்
14 - 12 - 97 ஞாயிற்றுக்கிழமை இன்று

காலை 5.30 மணிக்கு பிம்பஸ்தாபனம், அதனைத் தொடர்ந்து. கும்பபூசை, பூர்ணாகுதி இடம் பெற்று 8 45 மணியளவில் தூபி அபிசேஷமும் விசேட பூசையாத்திராதானம், கும்பம வீதிவலம் வருதல் என்பனவும் நடைபெற்று 9.15 மணியளவில் வரும் சுபவேளையில் சிவகாம சுந்தரிசமேத நடராசப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

விசேட மேள வாத்தியம் -கலாசூரி N. K பத்மநாதன்
ஆலய அமைப்பு - கோபாலசிங்கம்
ஆசி உரை:— சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர் நல்லை ஆதீனம்)
உயர் திரு. க. சண்முகநாதன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
உயர் திரு. து. வைத்திலிங்கம் (யாழ். மேலதிக அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளரும்.)

ஷை ஆலய பரிபாலன சபையினர்.

வாழ்த்துபவர்:
லிங்கன் கிறீம்ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/2346)

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்.
## அங்கத்துவ தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவி

குறி. இல. 201:12

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ) சம்பளத் திட்டம்:- ரூ. 2850 — 4450 / 70x10, 90x10

ஆ) தகைமை:-
கூட்டுறவுப் பணியாளரின் 2800 — 4250 / 65x10, 80x10 சம்பளத் திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சிப் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

அல்லது

ரூ. 2750 — 4100 / 60x10, 75x10 சம்பளத் திட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பத்திரம்/க. பொ. த. உயர் தரத்தில் 03 பாடங்களிலான சித்தி.

இ) வயது:-
விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

ஈ) விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் ரூ. 10 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

உ) விண்ணப்ப முடிவு திகதி:- 27 - 12 - 1997

- பொது முகாமையாளர்

10 - 12 - 1997 (சி/2330)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். திருநகர்ப் பகுதியில் 20 குடும்பங்களுக்கு ரூ.5,000

கொழும்புத்துறை, டிச. 14

யாழ். திருநகர் (ஜே-67) கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு 4 ஆம் கட்டமாக 20 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள கிராமசேவையாளர் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் தத்தமது பங்கீட்டு அட்டை, வங்கிப்புத்தகம், அடையாள அட்டை, ஐந்து ரூபா முத்திரை, குடும்ப அட்டை என்பனவற்றுடன் நேரில் தம்மை அலுவலகத்தில் சந்திக்குமாறு கிராம சேவையாளர் யோ. நீ. பொ. பாக்கியராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

# ரயில்கள் அடிக்கடி தடம் புரள்வது ஏன்?

கொழும்பு, டிச. 14

தற்போது ரயில்கள் அடிக்கடி தடம் புரள்கின்றன. அண்மையில் கொழும்பு - காலி ரயில் கிங்தொட என்ற இடத்தில் தடம்புரண்டது.

குறிப்பிட்ட வேகத்திற்கு மேலாக ரயிலை ஓட்டியதாலேயே ரயில் தடம்புரண்டதாக காரணம் காட்டி அதன் சாரதி வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். அதைத் தொடர்ந்து புகையிரத சாரதிகள் அனைவரும் குறிக்கப்பட்ட வேகத்திலேயே ரயில்களைச் செலுத்தினர். இதனால் ரயில்கள் மணிக்கணக்கில் காலதமாகின. விரக்தியடைந்த மக்கள் கடந்தவாரம் பயாகல புகையிரத நிலையத்தில் தண்டவாளத்தில் மரக்குற்றிகளை வைத்து மறியற் போராட்டத்தை நடத்தினர். இதனால் கொழும்பு - காலி ரயில் மற்றும் நெடுஞ்சாலை போக்குவரத்து சுமார் 3 மணி நேரம் பாதிக்கப்பட்டது.

இது ஒரு புறமிருக்க ரயில்கள் அடிக்கடி தடம் புரளுவது குறித்து வேடிக்கையான கதையொன்று ரயில் பயணிகள் மத்தியில் பேசப்படுவதாக 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவில் ஏன் அடிக்கடி ரயில்கள் தடம்புரள்கின்றன என்பது குறித்துக் கண்டறிய அரசாங்கம் ஒரு ஆணைக் குழுவை நியமித்தது என்றும் —

அந்த ஆணைக்குழு நாட்டின் நாலா புறங்களுக்கும் விஜயம் செய்து பல்லாயிரக் கணக்கானோரைச் சந்தித்து தனது இறுதி அறிக்கையைத் தயாரித்தது என்றும் —

சிறிலங்காவில் ரயில்கள் இரண்டு தண்டவாளங்களில் ஓடும்வரை அவை தடம்புரள்வதைத் தடுக்க வாய்ப்புக்கள் இல்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் பயணிகள் பேசிக் கொள்கின்றனராம்.

(ஐ-10)

# துளசித் தாயை நாளும் வணங்கினால் நற்பலன்கள்

இந்து மதம் இயற்கையுடன் பின்னிப் பிணைந்தது. இயற்கைக் கூறுகளில் இறைவனைக் கண்டு வழிபட்டவர்கள், வழிபடுபவர்கள் இந்துக்கள். வேத இலக்கியங்களில் காற்று, நீர், இடி முழக்கம், சூரிய ஒளி, மரம் முதலிய இயற்கையின் கூறுகளைத் தெய்வங்களாக எண்ணி வழிபட்டமைக்கு சான்றுகள் உண்டு. நதிகள் ஒழுங்காகப் பாய்வதற்கும், பருவ காலம் வருவதற்கும், பிரபஞ்ச ஒழுங்கிற்கும், அதன் கட்டுப்பாடான வரையறைக்கும் வருணன் என்னும் தேவனே காரணமெனக் கருதி வழிபட்டமை இங்கு நோக்கற்பாலது.

செல்வத்தின் அதிபதியாக விளங்குபவள் மகாலட்சுமி இவளின் மறுவடிவமாகக் கொள்ளப்படுபவள் துளசி. இவள் மனிதர்களின் நன்மைக்காக பூமியில் துளசிச் செடியாக விளங்குகின்றாள்.

பூமாதேவி சகல உயிர்களினதும் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உறைவிடமாக அமைபவள். அதே போன்றே அவளில் இருந்து தோன்றும் துளசிச் செடியும் எமது வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் பயன்படுவதாக அமைகிறது.

துளசி இலையால் இறைவனை அர்ச்சிப்பது சிறப்பினும் சிறப்பு. ஆயிரம் பாற்குடங்களால் திருமாலை அபிடேகம் செய்வதிலும் பார்க்க துளசி இலையால் அர்ச்சிப்பதால் பலன் மிகுதியாக ஏற்படுமென சமய இலக்கியங்கள் கூறுகின்றன.

நாளாந்தம் துளசியை வழிபடுபவர்களும், துளசித் தீர்த்தத்தைப் பருகுபவர்களும் நாராயணன் சயனம் செய்யும் திருவரங்கத்தை அடைவதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இலக்கண வரைவிலக்கணகாரர் துளசி என்ற சொல் ஈடிணை அற்றது என்ற பொருளைத் தருவதென்பர். ''துள'' என்பது ''ஈடு'' என்ற பொருளையும் ''சி'' என்பது ''இல்லாதது'' என்ற பொருளையும் தருவதாகக் கொண்டு ஈடிணை அற்றது துளசிச் செடியாகும் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இதனாலேயே ஈடிணை அற்ற பரம்பொருளாக சிவனுக்கும் துளசியால் அர்ச்சனை செய்வர்.

பெரும் பொருட்செல்வத்தைச் செலவிட்டு பெரும் யாகங்கள், வேள்விகள் செய்வதனால் ஏற்படும் பலாபலன்களை துளசித்தாய் எமக்குத் தருகின்றாள்.

மாதப் பிறப்பு, பௌர்ணமி அமாவாசை, ஆகிய நாள்களிலும் நண்பகல், இரவு ஆகியவேளைகளிலும், துளசிச் செடியைத் தீண்டுதல் கூடாது. தலையில் எண்ணெயை வைத்துக் கொண்டும், உடற் சுத்தம் இல்லாத காலங்களிலும், துளசி இலையைக் கொய்தால் அது திருமாலையே அவமதிப்பதாக அமையும் எனக் கருதப்படுகின்றது. துளசி இலையைக் கொய்து மூன்று நாள்களுக்குப் பயன்படுத்தலாம், சிரார்த்தம், விரதம், பிரதிட்டை, அர்ச்சனை ஆகியவற்றிற்கு துளசியைப் பயன்படுத்துதல் மிகுதியான பலனைத் தரும்.

மனிதர்கள் செய்யும் பாவங்களை எல்லாம் எரித்துப் பொசுக்கும் பெரும் நெருப்பாக துளசித்தாய் விளங்குகின்றாள். நமது பாவங்கள் எம்மைவிட்டு நீங்க நாம் துளசியைப் பூசிக்கவேண்டும். கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்றே மகாலட்சுமி தோன்றினாள். அந்நாளில் மட்டுமன்றி நாளாந்தம் அவளை வழிபட்டு உய்தி பெறுவோமாக

— ஆனந்தன்

# ஆஸ்பத்திரிக்குள் கட்டாக்காலிகள்

திருநெல்வேலி, டிச-14

கோண்டாவில் அரசினர் வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களினதும், மாடுகளினதும் தொல்லை அதிகரித்துவருவதாக முறையிடப்படுகிறது.

வைத்தியசாலைக்கு வேலிகள் இல்லாததினால் எவ்வித தடையும் இன்றி வைத்தியசாலை வளவுக்குள் பிரவேசிக்கும் கட்டாக்காலிகள் நோயாளர்களுக்கும், அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும் உபத்திரவம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# ஆலயத்தில் பூஜை நடத்த ஏற்பாடு

வடமராட்சி, டிச. 14

பெரிய விளான் விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்து நித்திய பூசைகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் பல ஆண்டுகளாக இந்த ஆலயம் மூடப்பட்டிருந்தது.

இவ்வாலயத்தைப் புனரமைக்கவென நிர்வாகக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-173)

# தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கும்

கொழும்பு, டிச. 14

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் உள்நாட்டு தொலைபேசிக் கட்டணங்களைக் உயர்த்துவதுஎனவும், வெளிநாட்டு தொலைபேசிக் கட்டணங்களை குறைப்பது எனவும் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரெலிகொம் நிறுவனம் ஜப்பானிய நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்த பின்னர் தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

(ஐ-10)

# ஆலய புனரமைப்பு பணி நிறுத்தம்

அச்சுவேலி, டிச. 14

அச்சுவேலி பத்தமேனி மிட்டிலாங்கூடல் நடராஜா அம்பலவாண விநாயகர் ஆலய திருப்பணி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வழிபடுவோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பல லட்சம் ரூபா செலவில் மேற் கொள்ளப்பட்டு வந்த ஆலயத்திருப்பணி வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது

(ஐ-11)

# பொம்மைவெளி பகுதியில் கசிப்பு கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், டிச 14

யாழ். பொம்மைவெளிப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து 6 லீற்றர் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பகுதி (ஜே-88) கிராம சேவையாளர் எஸ்.ரி. சகுந்தலாதேவி இக்கசிப்பைக் கண்டுபிடித்தார்.

பொது மக்கள் முன்னிலையில் கசிப்பு முழுவதும் நிலத்தில் ஊற்றப்பட்டதுடன் மேற்படி வர்த்தக நிலைய உரிமையாளர் கிராம சேவையாளரால் எச்சரிக்கப்பட்டார்.

(ஐ-79)

# ச.ச. நிலைய நிர்வாகசபைகள் 1998 இலும் நீடிக்கவேண்டும்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் இவ்வாண்டுக்கான நிர்வாக சபைகள் தொடர்ந்தும் அடுத்த (1998) ஆண்டுவரை பதவியில் இருக்கவேண்டும் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்துக்கான புதிய நிர்வாக சபை அண்மைக்காலத்தில் தெரிவு செய்யப்பட்டமையால், அந் நிர்வாக சபை ஒரு வருட காலம் பதவியில் இருக்க வேண்டியிருப்பதால், மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சனசமூக நிலையங்களினதும் இவ்வாண்டுக்கான நிர்வாக சபைகள் தொடர்ந்தும் அடுத்த வருடம் வரை பதவியில் இருக்க வேண்டும். அடுத்த ஆண்டு (1998) டிசெம்பரில் புதிய நிர்வாக சபைகளை சனசமூக நிலையங்கள் தெரிவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

# மக்கள் முகம்



அருட் சகோதரன் நீ. பாக்கியரஞ்சிற் அவர்கள் இம்மாதம் 17 ஆம் திகதி மன்னார் ஆயர் பேரருட் திரு. இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இறைவனின் குருவாக திருநிலைப் படுத்தப்பட உள்ளார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவனான இவர் தன் குருத்துவப் பயிற்சியை யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் பெற்றார். மன்னார் மறை வட்டத்தில் பணி புரிய இணைந்துள்ள இவர் யாழ். ஈச்சமோட்டையின் முதல் குரவராவார்.

இவர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் பி. செ. நீக்கிலாப்பிள்ளை பாக்கிய ரஞ்சிதம் மேரிராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர்.

★ ★ ★

முதுகலை மாணி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கியுள்ளது.

எம்முடைய பண்டைய தமிழ் இலக்கியங்களாகிய சங்கத் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்த ஆய்வேட்டுக்காகவே இப்பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.



1980 இல் பேராசிரியர் க. கைலாசபதியின் நெறிப்படுத்தலில் ''சி. வை. தாமோதரம்பிள்ளை - ஓர் ஆய்வு நோக்கு'' என்னும் ஆய்வேட்டுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முதுமாணிப் பட்டத்தினை இவருக்கு வழங்கியது.

இவ்வாண்டு பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நெறிப்படுத்தலில் 'சங்க இலக்கிய உரைப் பொருத்தப்பாடு — குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு'' என்னும் ஆய்வேட்டுக்காகக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யப்பான் கக்சுயின் பல்கலைக் கழக மொழியியல் நிறுவனத்தின் வரவு ஆய்வாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வரவு விரிவுரையாளராகவும் பணிபுரியும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் யப்பானிய — தமிழ் மொழி, பண்பாட்டு ஒப்பியல் ஆய்வில் கடந்த பதினான்கு ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார், ஆறு நூல்களும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

★ ★ ★

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரியும் திரு. நா. தணிகாசலம் பிள்ளைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளது.

வடபிரதேச கிராமப் பள்ளிக் கூடங்களின் மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள் பற்றி நடத்திய ஆய்வுக்காகவே இவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் 1994 ஆம் ஆண்டில் முறைசாராக் கல்வி முறையில் நாட்டுக் கூத்துக்கள்'' என்ற தமது ஆய்வேட்டுக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருந்தார்.



கலாநிதி தணிகாசலம்பிள்ளை, ''பாரம்பரிய தொழிற் பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகள்'' என்ற ஆய்வேட்டுக்கு கல்வி டிப்ளோமா பட்டத்தையும் —

''கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச சிறிய பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபர்களின் பங்கு'' என்ற ஆய்வேட்டுக்காக கல்வி முகாமைத்துவப் பட்டத்தையும் பெற்றிருந்தார்.

பட்டதாரி ஆசிரியராக 1976 ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் சில பாடசாலைகளிலும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் பணியாற்றினார். பூநகரி மகாவித்தியாலயம், குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றிய பின்னர் வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார்.

கிளிநொச்சி, பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியாக 1984 முதல் 1986 வரை பணியாற்றிய பின்னர் கிளிநொச்சியின் கல்வி அதிகாரியானார். யாழ். கல்வித் திணைக்களத்திலும் உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த பின்னர் இரண்டு வருடங்கள் முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும், யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்திலும், திறந்தவெளிப் பல்கலைக் கழகத்திலும் பகுதிநேர விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி உள்ளார்.

கல்விச் சிந்தனைகள், ஆரம்பக் கல்வி, கல்வி நிர்வாகம் ஆகிய இவரது மூன்று நூல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை

மலையகத் தமிழ் மக்கள் இந் நாட்டின் பிரஜைகளாகக் கருதப்படாமல், கொடுமையாக நடத்தப்படுவதனை வெளிக் கொணரும் வகையிலும் அவர்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதனை ஆட்சேபிக்கும் வகையிலும் மனித உரிமை தினத்தன்று கொழும்புலிப்டன் சதுக்கத்தில் பிரமாண்டமான மறியற் போராட்டம் இடம்பெற்றது.

பெருந் தோட்டப் பகுதி சிவில் அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்த மறியல் போராட்டத்தில் அறுபதுக்கும் அதிகமான தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை அடைந்து ஐம்பது ஆண்டுகளாகியும் அந்தச் சுதந்திரம் இந்நாட்டுத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது மறுக்க முடியாத யதார்த்தம்.

வடக்கு — கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாத இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களின் பிறப்புரிமைகள், வாழ்வுரிமைகளை நசுக்கியும் அடிப்படை மனித உரிமைகளைப் பறித்தும் அநீதி இழைக்கப்படுகிறது.

தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் மேலோங்கியதன் விளைவாக சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையே விரிசல் உண்டாகியது; பகைமை வளர்ந்தது; அதன் விளைவே இன்றைய ஆயுதப் போர்.

மலையகத் தமிழர்கள் சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக சிங்கள மக்களிடையே மிகவும் அன்னியோன்யமாக கலந்து வாழ்ந்து வருகிறார்கள் ஆயினும் அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களுக்குரிய உரிமைகளும் இன்னும் வழங்கப்படவில்லை.

காணி ஒன்று ஒருவரின் ஆட்சியில், பாவனையில் 99 வருடங்களுக்கு மேல் இருந்து விட்டால் அவருக்கு அது உரித்துடையதாகக் கருதப்படுகிறது; அதற்கான சட்டவசதியும் உண்டு.

ஆனால், மலையகத் தமிழர் சந்ததிகள் இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக பெருந் தோட்டப் பிரதேசத்தில் வாழ்ந்த போதிலும் அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக முடியவில்லை. மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்குக் கேவலம் ஒப்பந்தங்கள் தேவைப்பட்டன!

அவ்வாறிருந்தும் மலையகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் இன்னும் பிரஜாவுரிமை கிடைக்கவில்லை என்பது அநீதி. அவர்கள் வெளிநாட்டவர்கள் போல, வேண்டத் தகாதவர்களாக இம்சிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மட்டும் விசேட தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்குக் கூட இன்றைய அரசு முனைந்துள்ளது!

மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை உள்ள நாடு என்று காட்டிக் கொள்வதற்காக கடந்த ஒரு சில வருடங்களாக ஸ்ரீலங்கா அரசுகள் மனித உரிமைகள் குறித்து ஆகா, ஓகோ என்று பிரமாதப்படுத்துகின்றன.

ஆனால் இதுவரை நாட்டுரிமை இல்லாத மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படாமை ஒன்றே அந்தப் பிரமாதங்கள் போலியானவை என்பதனை நிரூபிக்கப் போதுமானதாகும்.

மக்களின் மிக மிக அடிப்படையான உரிமை பிரஜாவுரிமை. அதற்குத் தகுதியான மலையகத் தமிழர்களுக்கு அந்த உரிமையை மறுத்துக் கொண்டு மனித உரிமைகள் பேணப்படுவதாகக் கூறப்படுவது வடிகட்டிய தனமே!

# நேரடித் தொலைபேசி வசதி முல்லை அரச அதிபர் கோரிக்கை

வடமராட்சி, டிச. 14

புதுக்குடியிருப்பில் உள்ள தமது அலுவலகத்துக்கு கொழும்புடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ள நேரடித் தொலைபேசி வசதியைத் தாமதமின்றி ஏற்படுத்தித் தருமாறு முல்லைத்தீவு அரச அதிபர் இ. தர்மகுலசிங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

''ஜெயசிக்குறு'' இராணுவ நடவடிக்கையினால் முல்லைத்தீவு செயலகத்தில் இருந்து வெளியிடங்களுடன் தொடர்பு கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இதுவரை காலமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வாகனம் புதுக்குடியிருப்புக்கு வந்து செல்லும் வேளைகளில் அதிலுள்ள தொலைபேசி மூலம் தான் கொழும்புடன் அவசர தேவைக்காக இதுவரை நாளும் தொடர்பு கொண்டு வந்தோம்.

தற்போது செஞ்சிலுவைச் சங்க வாகனம் புதுக்குடியிருப்புக்கு வந்து செல்வதில்லை. அத்துடன் தரைமார்க்கமாக மன்னார் ஊடாக வவுனியாவுக்குச் செல்ல ஒரு நாள் பிடிக்கிறது.

இச் சிரமங்களைப் போக்க தாமதமின்றி முல்லைத் தீவு செயலகத்துக்கு நேரடித் தொலைபேசி வசதி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அரசிடம் தாம் கோரியுள்ளதாக அரச அதிபர் தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

[ஐ-173]

## தென்மராட்சியில் கோழிக்கு நோய்

தென்மராட்சி, டிச. 14

தென்மராட்சிப் பிரதேசத்தில் கோழிகளுக்கு கம்போரா என்னும் புதிய நோய் பரவி வருகிறது.

இந் நோயினைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்து பிரதி புதன்கிழமை தோறும் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்படும் கோழிகள் இறகுகளைத் தூக்கிய நிலையில் உணவு சாப்பிட முடியாமல் இறந்து போகலாம் எனவும், இந் நோயினால் கோழிகள் பாதிக்கப்படாமலிருக்க உடனடியாக தடுப்பு மருந்தினை பெற்றுக் கொள்ளுமாறும் கால் நடை வைத்தியர் அறிவித்துள்ளார் (ஐ 117)

# மனக்கறைகளை அகற்றிய பின் இறைவருகை எதிர்பாருங்கள்

திரு வருகையின் மூன்றாம் வாரத்தில் நுழைகின்றோம். கடந்த கால சம்பவங்கள் ஊடாக எமது வாழ்வில் நாம் கண்டுணர்ந்து தரிசித்தவைகளை எமக்கொரு பாடமாக்கி இப் புதிய திரு வருகைக் காலத்துக்கு எம்மைத் தயார் செய்வதற்கே இக் காலம் எம்மை ஆயத்தப்படுத்தும் காலமாக அழைப்பு விடுக்கப்படுகிறது.

எமக்கு எமக்கு என எத்தனையோ பொருள், பண்டங்களையும் காணி, பூமிகளையும் சேர்த்துக் குவித்தோம். இதனால் எமது உறவுகளிடமும் எம் சூழலிலும் நாம் பெருமைப்படும் அளவுக்கு மனித மனங்களை சேர்த்துக் கொள்ளாது பொருள் வளங்களிலே பற்றுள்ளவர்களாக வாழ்ந்து வந்தோம்.

அந்தக்காலம் எம் மனங்களில் இருந்துவந்த பொருள், பெயர், கௌரவம் என்ற பேராசைக் காலமாகவும்,

### ஞாயிறு நற்பிரசாதம்

மனித உறவில் அந்நியப்பட்ட காலமாகவுமே எண்ணிக் கொள்ள வேண்டும். ஒரு கணம் பொருள், பண்டங்களை விட்டு போலிக் கௌரவங்களைக் களைந்து எம்மைத் தனிமையாக்கிய இடப்பெயர்வு எமக்கு உணர்த்தி நின்ற பல அனுபவங்களை மீட்டுப் பார்க்கையிலேயே அதன் அனுபவங்களின் பின் இன்று எம் மக்களின் வாழ்வில் எம் பங்கு என்ன? எப்படி உள்ளது? என சிந்திக்கும் போதுதான் அன்றைய இறைவார்த்தை இன்றும் எம் கேள்விக்கு பதிலாகக் கிடைக்கிறது.

...அப்போது, ''நாங்கள் செய்யவேண்டியது என்ன?'' என்று மக்கள் கூட்டம் அவரைக் கேட்டது. அதற்கு அவர், ''இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும்'' என்றார். ஆயக்காரர் ஞானஸ்நானம் பெற வந்து ''போதகரே நாங்கள் செய்யவேண்டியது என்ன?'' என்று அவரைக் கேட்க அவர், ''உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் கேட்க வேண்டாம்'' என்று பதிலளித்தார். ''நாங்கள் செய்யவேண்டியது என்ன?''

என்று படைவீரரும் கேட்டனர். அவரோ ''ஒருவரையும் பயமுறுத்தி பணம் பறிக்க வேண்டாம்; பொய்க் குற்றம் சாட்ட வேண்டாம்; கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்'' என்றார்.

(லூ - 3 - 10 - 18)

எமது நிலைகளுக்கேற்ப எம்மனங்களில் எழும் கேள்விகளையும் பதில்களையும் நடைமுறை வாழ்விலும் கடைப்பிடித்து வாழும்போது தான் எம்மை நாமே ஆயத்தப்படுத்தி இறை வருகையை எதிர்கொண்டு வரவேற்கும் தகுதியுள்ளவராகிறோம்.

இன்று எமது தகுதிகள் பலவாறு நிர்ணயிக்கப்படும் மனித வரையறை கோடுகளிடையே இறைவனை எமது இல்லத்திலும் உள்ளத்திலும் எதிர்கொள்ள முனையும் போது நாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாகிறோம். உண்மையில் எமது மனங்களில் உள்ள கறைகள் எம்மில் இருந்து அகற்றப்படும் வரை அந்த இறைமகன் பிறப்பினை எம் வாழ்வில் எதிர்பார்ப்பது கானல் நீராகவே இருக்கும். இதனை உணர்ந்தவர்களாக எம்மை நாமே சுயதரிசனத்தின் மூலம் இறை வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் அர்த்தம் கொடுத்து இறைவனின் திருவருகைக்கு எம்மையும் எம் சூழலையும் தயார்ப்படுத்த வேண்டும்.

குடில்களிலும் கோயில்களிலும் அல்ல, நல்ல மனங்களிலேயே இறைமகனின் பிறப்பு அமைய வேண்டும். ★

- அருட் சகோதரி
மரினா மரியாம்பிள்ளை

### நாளை

**கார்த்திகை 30**

திங்கட்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 8 08 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

நள்ளிரவு 12.15 வரை.

சுபநேரம்: 12 21-1.51

ராகுகாலம்: 7.51 9.21

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரப்படி)

## காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும் —

மற்றவர் நீராவியடியைச் சேர்ந்த அச்சுதபிள்ளை பாலச்சந்திரன் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் கொல்லப்பட்ட மூன்று கைதிகளின் மரணவிசாரணை நேற்று களுத்துறையில் நடைபெற்றது.

சடலங்களைக் களுத்துறையிலேயே அடக்கம் செய்யுமாறு பதில் நீதிபதி உத்தர விட்டார்.

சடலங்களைச் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரி இறந்தவர்களின் உறவினர்களால் நாளை நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று தெரியவருகிறது.

## இறுதி..

(முதலாம் பக்கத் தொடர்)

திருந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்தக் குழு நடத்தும் இறுதி விசாரணையாக இன்றைய விசாரணை அமைவதாகவும்-

இன்றைய விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற் போனவர் தொடர்பாகவும் இன்றைய விசாரணையில் சாட்சியம் அளிக்கலாம் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

சாட்சியம் அளிக்க இருப்பவர்களை இன்று காலை 8 மணிக்கு யாழ். செயலகத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்)

இவ்வாறு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் நேற்று பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்பு இணையமைச்சர் அனுருத்த ரத்வத்த பெப்ரவரி 4 ஆம்திகதிக்கு முன்னர் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவதாக அறிவித்துள்ளார்.

இவர் இவ்வாறு பல தடவைகள் பல காலக்கெடுக்களை விதித்திருந்தார். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் எதுவும் நடக்கவில்லை.

இப்போது பெப்ரவரி 4 ஆம் திகதி என அவர் காலக்கெடு விதித்துள்ளார்.

அத்தோடு தற்பொழுது 20 ஆயிரம் துருப்புக்கள் வரை இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. விரைவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமானால் மேலும் அதிகளவு துருப்புகள் தேவைப்படும். இதுவும் சாத்தியமற்ற ஒன்றாகக் காணப்படுவதால் தற்போது விதித்துள்ள காலக்கெடுவும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இப்படி அவர் கூறினார்.

(இ-9)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்)

தேர்தலில் கலந்து கொள்வதால் நிலைமை சீரடைந்து விட்டது என்றோ பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்றோ கூட்டணி கருதவில்லை. ஆனால் முன்னைய தேர்தல்களில் இடம்பெற்றது போன்ற ஒரு நிலைமை உருவாவதைத் தவிர்ப்பதே கூட்டணியின் நோக்கம் என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சிசபை தேர்தல்களில் போட்டியிட ரெலோ தீர்மானித்துள்ளதாக ரெலோ முதல்வர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் கலந்து கொள்வதைத் தவிர்க்க முடியாத ஓர் அரசியல் போராட்டமாகவே ரெலோ கருதுகின்றது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-9-21)

## தாக்கியவர்..

(முதலாம் பக்கத் தொடர்)

கைதிகளை உணவு பரிமாறுவது வழக்கம்.

சம்பவதினம் சிங்களக் கைதி ஒருவர் தமிழ்க் கைதிகளுக்கு உணவு பரிமாறிய போது தமிழ்க் கைதி தமக்கு வழங்கப்பட்ட உணவு போதாது என்று சொன்னாராம்.

புலிகள் எங்களின் ஆட்களை கொல்லுகிறார்கள். உங்களுக்கு உணவு வேண்டுமா? என்று உணவு வழங்கியவர் கேட்டதாகவும் —

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற வாக்குவாதத்தை அடுத்தே தமிழ்க் கைதி அகப்பையால் தாக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து அடுத்த நாள் வியாழக்கிழமை சிங்களக்கைதிகள் தமது பகுதியில் இருந்து திரண்டு வந்தனர்.

அப்பொழுது அங்கே கடமையில் நின்ற பொலீஸ் சுப்பிரின்டன் ஒருவர் தலையிட்டு அங்கு காவலுக்கு நின்ற படையினரை எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

படையினர் தலையிட்டு அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

இந்த சம்பவத்தின் பின்னர் தமிழ் கைதிகள் தற்காப்பு நடவடிக்கையாகத் தடி, கல் போன்றவற்றை எடுத்து வைத்திருந்தனர்.

வெள்ளிக்கிழமை காலை தமிழ்க் கைதிகள் இருந்த பகுதிக்கு சிறைக்காவலர்களுடன் வந்த பொலீஸார் கைதிகளிடம் இருந்து கற்களையும் தடிகளையும் எடுத்துச்சென்று விட்டனர்.

தமிழ்க்கைதிகளுக்கு எதுவும் நேரிடாது பார்த்துக் கொள்வதாக பொலீஸ் சுப்பிரின்டன் அப்பொழுது உறுதி அளித்தார்.

வெள்ளிக்கிழமை பகல் 2 மணி அளவில் சிங்களக் கைதிகள் திரண்டு வெளியே வந்தனர்.

அவர்கள் வருவதற்கு முன் ஆயத்தமாகிக் கொண்டிருந்ததை தமது பகுதியில் இருந்து தமிழ்க் கைதிகள் காணக் கூடியதாக இருந்தது என்று கூறப்படுகிறது.

தமது சிறைக்கூடத்தின் வெளிவாசலை தமிழ்க் கைதிகள் மூடி போராட்டம் நடத்தினர். மிளகாய்த்தூள், சுடுதண்ணீர் ஊற்றப்பட்ட நிலையிலேயே தாக்குப்பிடிக்க முடியாத அவர்கள் தமது சிறை அறைக்குள் ஓடிச்சென்று கதவைப் பூட்டிக் கொண்டனர்.

ஓடும்போது தடக்கிவிழுந்தவர்களே கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7-9-21)

## 460 தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்)

பார்வையிட்டனர்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார், ஈ.பி.டி.பி. பேச்சாளர் கே. தவராசா, மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் மற்றும் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், சட்டத்தரணிகளான அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி அன்ரனி புனிதநாயகம் ஆகியோர் பார்வையிட்டனர்.

மகஸீன் சிறையில் இருந்து மாற்றப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலை 'டி' கட்டடத் தொகுதியில் வைக்கப்பட்டிருந்தவர்களும் 'பி' கட்டடத் தொகுதியில் வைக்கப்பட்டிருந்தவர்களுமே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்துக் களுத்துறை சிறைச்சாலைக்கு நீதி அமைச்சின் செயலாளர் எஸ். எம். ஜயசிங்க நேற்று விஜயம் செய்து நிலைமையை நேரில் ஆராய்ந்தார். (இ-9-8-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயிரைக் காப்பாற்றுமாறு..

(முதலாம் பக்கத் தொடர்)

திட்டமிட்ட ஒரு செயல் போலவே தெரிகின்றது. ஏனெனில் இச்சம்பவம் நடைபெற்ற போது அங்கிருந்த சிறைக் காவலர்களோ அல்லது இராணுவத்தினரோ அதைத் தடுக்க எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கைதிகள் சிறைக்கூடத்துக்கு வெளியே இருந்த பெரியகதவை உடைப்பதற்கு சுமார் அரை மணித்தியாலம் முயற்சித்தார்கள். அந்த முயற்சியை தமிழ்க் கைதிகள் தடுத்துக்கொண்டே இருந்தார்கள். அந்த நேரத்தில் கூட அங்கு நின்ற சிறைக்காவலர்களாலோ அல்லது இராணுவத்தினராலோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதன் பின் தமிழ்க்கைதிகள் மீது மிளகாய்த்தூள், சுடுதண்ணீர் போன்றவை வீசப்பட்டன. இதனால் அவர்கள் அங்கிருந்து உள்ளே ஓடிச் சென்று தமது அறைக்குள்ளே நுழைந்து பூட்டிக் கொள்கின்ற ஒரு நிலை ஏற்பட்டது.

அவர்கள் ஓடிச் செல்லும் போது தவறி வீழ்ந்த மூன்று கைதிகளே வெட்டிக்கொல்லப்பட்டார்கள். அப்படித் தவறி வீழ்ந்த ஒரு கைதி இராணுவ வீரர் ஒருவர் முன்னால் சென்று தன்னைக் காப்பாற்றுமாறு மன்றாடியிருக்கின்றார்.

அப்படியிருந்தும் அந்த இராணுவ வீரர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த இராணுவ வீரர் முன்னாலேயே இந்தக் கைதி வெட்டிக் கொல்லப்பட்டார்.

இப்படி அவர் கூறினார்.

(இ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிபுஷ்பம் சின்னையா

இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரிபுஷ்பம் சின்னையா காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஏனஸ் நவரட்ணம் சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்தி ஜெயராசா (பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்), பாஸ்கரன் (ஜேர்மனி), வசந்தி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா, றஞ்சிதமலர், தவமணி, றட்னேஸ்வரன், கௌரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 14-12-97 இன்று ஞாயிறு மாலை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. லி. கி. ஜெயராசா
(மகன்)

பிரதான வீதி,
இளவாலை.

(51832)

### நாராயணபிள்ளை தெய்வயானை

மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை தெய்வயானை 11-12-1997 அன்று வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விநாசித்தம்பி நாராயணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சந்திரசேகரம் சிவகாமனின் அன்புச் சகோதரியும், கணேசமூர்த்தி, கடம்பமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோவிந்தசாமியின் அன்புப் பெரியண்ணாவும், மகேஸ்வரி, தவரஞ்சினி (கனடா), மலர்விழி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், உலகேஸ்வரி (கனடா), அழகேஸ்வரி, சுதாகரன் (கனடா), மதியழகன், கீர்த்தனா (கனடா), பிரியங்கா (கனடா), தர்மராஜ், கிருஷ்ணகுமாரி, ஹேமலதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14-12-97 பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்

தகவல்:
நா. கணேசமூர்த்தி
(மகன்)

மாதகல் வடக்கு,
மாதகல்.

(51820)

### நாகநாதர் விஸ்வலிங்கம்

(38, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-உரிமையாளர்)

புங்குடுதீவு 5-ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான நாகநாதர் விஸ்வலிங்கம் 12-12-97 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், நாகநாதர்-தங்கம்மாவின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-பொன்னம்மாவின் மருமகனும், விஜயலட்சுமி, மகாதேவன்(சுவிஸ்), மங்கயேஸ்வரி, மீனாம்பிகை, காலஞ்சென்ற மகேந்திரன், சிவபாலன், (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, ஜெயராணி, பத்மநாதன், காலஞ்சென்ற யோகநாதன், பத்மாதேவி (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், சுந்தரம்பிள்ளை, அமிர்தம்மா, காலஞ்சென்றஇரத்தினம்மா. நடராசா, கனகம்மா. மரகதம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற இளையப்பா, துரையப்பா, காலஞ்சென்ற செல்லத்தம்பி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், கேமகாந்தன், கேதாரகௌரி, கமலகௌரி, புஷ்பகாந்தன். கமலகாந்தன், விமலகாந்தன். அமலகாந்தன், சிவதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(14-12-97) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12—00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
ப மங்களேஸ்வரி

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(51831)

## ஈழத்தமிழருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

வடிக்கைக் குழுச் செயலாளர் கலாநிதி எஸ். சதானந்தன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். இராமதாஸ், முன்னாள் இந்திய தலைமை நீதியரசர் மணி ஐயர், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வர் ஆகியோரும் —

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தும் தலா ஒவ்வொரு பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருந்தனர்.

ஜோசப் பரராஜசிங்கமும், குமார் பொன்னம்பலமும் ஏற்கனவே புதுடில்லி சென்றிருந்தனர்.

''இம் மாநாடு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தேடும் நோக்கம் கொண்டது என்பதால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது'' என இந்திய உள் விவகார அமைச்சர் இந்திரஜித் குப்தா மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கருத்துத் தெரிவிக்கையில் 'இம்மாநாடு விடுதலைப் புலிகள் ஆதரவு மாநாடோ அல்லது விடுதலைப் புலிகளின் நிதியுதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடோ அல்ல'' என்றார்.

(இ-21)


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

411/1, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்

புதிய கல்வியாண்டு 1998

ஆண்டு 6 முதல் O/L வரை

| | |
|---|---|
| கணிதம்: | திரு. B P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம்: | திரு. இரா. செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி: | எமது வழமையான பிரபல ஆசிரியர் |
| தமிழ்: | திரு. S. கதிர்காமத்தம்பி<br>திரு. பண்டிதர் |
| ஆங்கிலம்: | திரு T. சகாதேவன் |
| வர்த்தகம்: | திரு. T அரவிந்தன் |

★ கணிதம் பாடத்திட்டத்துடன் கடந்த கால 25 பரீட்சை வினாத்தாள்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

★ வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.

[51768]


## மரண அறிவித்தல்

### திருமதி ரஞ்சிதபூரணி மகேஸ்வரன்

(ஓய்வு பெற்ற நெசவுப் போதனாசிரியர்)

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ரஞ்சிதபூசணி மகேஸ்வரன் 13-12-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரனின் (ஆசிரியர், யா/திருநெல்வேலி இ. த. க. பாடசாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு திருமதி தம்பிஐயா அவர்களின் மூத்த புதல்வியும், திரு திருமதி நல்லையா அவர்களின் மருமகளும், மற்றும் சதீஸ் (லண்டன்), பிரதீஸ் (யா/பரியோவான் கல்லூரி ஆண்டு-8) ஆகியோரின் தாயாரும், விவேகானந்தன் (லண்டன்), அருளானந்தம் (லண்டன்), திருமதி க. பிரேமாவதி (லண்டன்), யோகானந்தன் (லண்டன்), திருமதி ம., சந்திரவதனா (கனடா), சற்குணானந்தன் (யாழ். மாநகர சபை), சுதானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 14-12-1997 ஞாயிற்றுக்கிழமை (இன்று) நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. மகேஸ்வரன்
(கணவன்)

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(51830)


ஆரம்பம் ஆரம்பம் ஆரம்பம்

இதோ! நாளை முதல் ஆரம்பம்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

'மகாநதி'யின்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

10% முதல் 20% வரையிலான சிறப்புக்கழிவு

இத்தள்ளுபடி 15—12—1997 தொடக்கம் 31—12—1997 வரை.

- இன்றைய தலைமுறையினருக்கேற்ப இறக்குமதி செய்யப்பட்ட திருமணப்பட்டுச்சேலைகள், பட்டு வேட்டிகள்.
- ஆடவர்களுக்கேற்ற அழகான டிசைன்களில் T. சேட், சேட், றெடிமேட் றவுசர், சூட்டிங் வகைகள்.
- மங்கையர்களுக்கு ஏற்ற அழகான டிசைன்களில் ஸ்கேட் அன் பிளவுஸ் கவுண் சல்வார் கமிஸ், புதிய சாறிவகைகள் (பொற்காலம், பிறின்ஸ் டயானா, கொனிக்கா குயின், அனுமல்குயின், V. I. P., லண்டன் பசன், கோல்டன் குயின், றோயல் செலக்சன், லவ் டுடே, பில்லி, சல்மான்குயின்) மேலும் பல சாறி வகைகள்.
- சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற கண்கவர் சிங்கார ஆடை வகைகள்

மற்றும்

பட்டர்சில்க், யோயோ, இன்ரகூலர் வாயிறா, மூஸ்கிறேப், றெபோகூலர், டயட்டோப் போன்ற பிறின்ற் பிளேன் துணி வகைகளுக்கும்:

மகாநதி புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

4, நவீன சந்தை,
சாவகச்சேரி,

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/2337)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org